**கதிர்காமம் பிரதேச சபை**
**மொனறாகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 13 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜுன் 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கதிர்காமம் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி நிதிமையினையும் நிதிசார் செயலாற்றலினையும்இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லையென என அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 67,575 ஆன ஒலிப்பெருக்கி இயந்திரம் மற்றும் ரூபா 4,662,890 ஆன கட்டிடங்கள் நிர்மாணம் மற்றும் பொருத்திகளின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் கேள்விகோரும் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 3,190,902 ஆன பிணை வைப்புக்கள் கிடைக்க வேண்டிய வருமானத்திற்காக ஈடுசெய்யப்பட்டிருந்த போதிலும் உரிய சீராக்கங்கள் கணக்குகளில் செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் ரூபா 3,190,902 கேள்வி பிணை வைப்புக்கள் கூடுதலாகவும் மிகை ரூபா 2,508,914 ஆலும் திரண்ட நிதியம் ரூபா 681,988 ஆலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) முன்னைய ஆண்டின் எசல உற்சவ சமயத்தில் தற்காலிக நிலத்துண்டுகளை குத்தகைக்கு வழங்கியதால் கிடைத்த ரூபா 801,000 தற்காலிக வியாபார காணி வாடகை தலைப்பிற்கு செலவு வைக்கப்படாமல் கேள்வி வைப்பு கணக்கிற்கு செலவு வைத்தமையால் திரண்ட நிதியம் அப்பெறுமதியால் குறைத்தும் கேள்வி வைப்புக்கள் அப்பெறுமதியால் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 1,000,000 மூலதன மானியக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமையால் திரண்ட நிதியம் அப்பெறுமதியால் குறைத்தும் வைப்புக்கள் அப்பெறுமதியால் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் நிர்மாணங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,027,069 மூலதனச் சொத்துக்கள் நிர்மாண செலவின தலைப்பிற்கு வரவு வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் அப்பெறுமதியால் ஆண்டின் செலவினம் மற்றும் பொது வைப்புக்கள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணக் கடன் கொடுத்தோர் ரூபா 8,350,990 மீதி ஆக இருந்த போதிலும் அது ரூபா 6,218,528 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 2,132,462 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. ஆகையால் ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டின் போது நிர்மாணக் கடன் கொடுத்தோருக்கு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்த ரூபா 571,889 செலவினக் கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்தமையால் நிர்மாணக் கடன் கொடுத்தோர் அப் பெறுமதியால் கூடுதலாகவும் செலவினக் கடன் கொடுத்தோர் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது செலவினக் கடன் கொடுத்தோருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 52,900 நிர்மாணக் கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்தமையால் செலவினக் கடன் கொடுத்தோர் அப் பெறுமதியால் கூடுதலாகவும் நிர்மாணக் கடன் கொடுத்தோர் அப்பெறுமதியால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,313,479 தொகை நிர்மாணக் கடன்கொடுத்தோரின் கீழும் கணக்கீடு செய்திருந்தமை மீளாய்வாண்டின் போது சீராக்கப்படாமையால் உரிய பெறுமதிகளால் நிர்மாணக் கடன் கொடுத்தோர் கூடுதலாகவும் திரண்ட நிதி குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணக் கணக்கின் மீதி ரூபா 2,941,554 ஆக இருந்த போதிலும் அது ரூபா 2,706,609 ஆக காண்பிக்கப்பட்டு வித்தியாசம் நிலுவை ஏனைய வருமானக் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. அதனால் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 234,945 குறைத்தும் ஏனைய நிலுவை வருமானம் ரூபா 234,945 கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 995,986 ஆக இருந்த போதிலும் அது ரூபா 895,986 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் முத்திரை வருமானம் ரூபா 100,000 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் சனவரி மாதத்திற்காக ரூபா 386,000 ஆன முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்திற்கு செலவு வைக்கப்பட்டமையால் ஆண்டின் முத்திரை வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) முன்னைய ஆண்டின் போது முத்திரைக் கட்டண வருமானத்திலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 69,195 ஆன 3 சதவீத நிர்வாகக் கட்டணம் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(க்) மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானப் பெறுவனவு 513,463 நானாவித வருமானமாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் பொறுப்புக்கள் அப்பெறுமதியால் அதிகரித்தும் மிகை ரூபா 33,100 இனால் குறைந்தும் திரண்ட நிதியம் ரூபா 480,363 ஆல் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 172,349 ஆன நிலையான வைப்புக்களின் வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் மிகை மற்றும் கிடைக்க வேண்டிய நிலையான வைப்புக்களின் வட்டி அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(கா) நிலையான வைப்புகளுக்காக முன்னைய ஆண்டிற்குரித்தாக கிடைத்த ரூபா 116,817 ஆன வட்டி வருமானம் நடப்பாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆதலால் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் சபைக்குச் சொந்தமான 13 சபை ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியதால் கிடைக்க வேண்டிய ரூபா 4,051,598 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை இதனால் மிகை ரூபா 3,980,765 ஆலும் திரண்ட நிதி ரூபா 70,833 ஆலும் கிடைக்க வேண்டிய ஆதன வருமானம் ரூபா 4,050,598 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,014,541 ஆக இருந்ததுடன், பதிவேடுகள் அட்டவணைகளின் பிரகாரம் மீதி ரூபா 26,628,696 ஆக இருந்தது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

(i) நீண்டகாலமாக கணக்குகளில் இருந்து வரும் அறவிடப்பட வேண்டிய தரப்பினர் இனங்காணப்படாத வியாபார நிலைய வாடகை ரூபா 6,351,392 தொகையை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலுவை பொது வியாபார வாடகை மற்றும் நிலுவை கடை வாடகையான ரூபா 2,541,124 கூட்டுத்தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2009-2013 காலப்பகுதிக்குரிய பெறுமதி சேர் வரி ரூபா 4,319,539 மற்றும் 2009-2016 காலப்பகுதிக்குரிய முத்திரை வரி ரூபா 382,516 என்பன மீளாய்வாண்டின் போதும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 7,156,420 ஆன சொத்து விடயமொன்று, ரூபா 16,419,462 கூட்டுத்தொகையான 04 பொறுப்பு விடயங்கள் மற்றும் ரூபா 9,618,337 கூட்டுத்தொகையான 04 வருமான விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தன.

### 1.3.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | |
| | (i) 24 ஆம் பிரிவு | - | சபைக்குச் சொந்தமான வீதிகள் மற்றும் சிறு வீதிகள் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 158, 161, 162, 163 மற்றும் 166 ஆம் பிரிவுகள் | 5,123,833 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் நிலுவை வீதவரி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) 159 ஆம் பிரிவு | 4,051,598 | வருடாந்தக் கேள்வி அடிப்படையில் குத்தகைக்கு வழங்கிய ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவையின் 204 ஆம் விதி | - | 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்விற்காக சமர்ப்பிக்கப் படாத 25 பொருள் உருப்படி தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் 1985 மார்ச் 20 ஆந் திகதிய 08/01/38 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) | சபை அதிகாரப் பிரதேசத்தின் திட்டக் குழுவின் அங்கீகாரமொன்று இல்லாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று செய்யப்பட்டிருக்க வில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,841,630 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 10,171,964 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 2,194,000 | 2,194,000 | 17,755,120 | 2,416,902 | 8,119,400 | 8,119,400 | 5,519,014 | 5,123,833 |
| வாடகை | 8,878,400 | 8,878,400 | 13,222,570 | 9,394,519 | 14,440,900 | 14,440,900 | 3,871,766 | 8,892,516 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 768,690 | 768,690 | 1,021,339 | - | 967,600 | 967,600 | 1,782,614 | - |
| ஏனைய வருமானம் | 14,010,100 | 14,010,100 | 20,038,898 | 6,031,315 | 22,420,100 | 22,420,120 | 15,904,962 | 5,499,925 |
| மொத்தம் | **25,851,190** | **25,851,190** | **52,037,927** | **17,842,736** | **45,948,000** | **45,948,020** | **27,078,356** | **19,516,274** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 25.8 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டில் அதில் ரூபா 52 மில்லியன் சேகரிப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆண்டின் இறுதி அளவில் ரூபா 17.8 மில்லியன் நிலுவையாக காணப்பட்டது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பட்டியலிடப்பட்ட ரூபா 6,151,305 தொகையான வீதவரி வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 2,818,623 சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த பட்டியல் பெறுமதியில் 46 அளவிலான மிகவும் குறைந்த பெறுமதியொன்றாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 2,414,575 தொகையான நிலுவை வீதவரி வருமானத்தில் ஆண்டினுள் ரூபா 467,658 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வீதவரி அறவீடு 19 சதவீதம் அளவிலான மிகவும் குறைந்த பெறுமதியொன்றாக இருந்தது.

### 2.2.4 வாடகை

(அ) 2013 ஆம் ஆண்டின் போது அரச விலைமதிப்பாளர் ஒருவரால் கடைகளின் வாடகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் புதிய வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 17,727,600 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்குச் சொந்தமான கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 918,500 ஆக இருந்தது.

### 2.5 ஏனைய வருமானம்

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்துவற்கான கட்டணங்களை அறவிடுவதற்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசித்தப்பட்டிருந்த போதிலும் முச்சக்கர வண்டி நிறுத்தும் இடங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு உரிய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் மூலதன நிலப்பெறுமதியில் 2 சதவீத வருடாந்த வரி அறவிடுவதற்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசித்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு உரிய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்குரிய விளம்பர அறிவித்தல் பதாகைகளுக்கான கட்டணம் அறவிடுவதற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசித்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி நிறுவனமொன்றின் அறிவித்தல் பலகைக்காக ரூபா 181,950 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எசல உற்சவத்தின் போது 06 தனியார் நிறுவனங்களினால் நடாத்திச் செல்லப்பட்ட 07 தற்காலிக நடமாடும் கூடங்களுக்காக ரூபா 480,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,941,554 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 609,986 ஆக இருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 18 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

பிறப்பிக்கப்பட உப சட்டஉறுதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1816/43 ஆம் இலக்க 2013 யூன் 28 ஆந் திகதிய வர்த்தமானி பத்திரத்தின் மூலம் பிரசித்தப்படுத்தப்பட்டிருந்த ஊவா மாகாண உப விதிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் 13 ஆவது பகுதியின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி விதிக்கப்பட்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ செலவினம் மீள் நிரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் சபை அறிந்துகொள்ளாமையால் அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 யூன் 05 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட 181 கட்டிடதிட்டங்கள் பரீட்சிக்கப்பட்டு இணக்கச்சான்றிதழ்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூலை 06 ஆந் திகதியின் பின்னர் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் மூலம் கிடைத்திருந்த ரூபா 24,928,666 பெறுமதியான மோட்டர் கிரேடர் இயந்திரம் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டுகளின் போது 03 வாகன நிறுத்துமிடங்களிலிருந்து வருமானத்தை சேகரிப்பதற்காக தரகு அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 03 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 108,000 பெறுமதியான பற்றுச்சீட்டுக்கள் சபைக்கு கையளிக்கப்படாதிருந்ததுடன் குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

(அ) சபையினால் 66 நிரந்தர மற்றும் அமைய சுகாதார தொழிலாளர்கள் மற்றும் 13 வீதி தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 22 தொழிலாளர்கள் ஏனைய பதவிகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) சுகாதார தொழிலாளர் பதவியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையினை விட அமைய அடிப்படையில் 35 சுகாதார தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சபை நிதியத்திலிருந்து ரூபா 9,271,186 ஆன சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

சபையினால் உடமை கொண்டுள்ள 28 காணிகளின் உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

**சேதனப் பசளை பிரிவிற்கு கொங்கிரிட் இடல்**

அளவுப் பத்திரம் மற்றும் அளவீட்டுப்பத்திரம் என்பவற்றுடன் பௌதீக ரீதியான வேலைகள் பரிசோதனை செய்யப்பட்ட போது கொங்கிரீட் மேவுகை உயரம், 1 அங்குலம் குறைத்து இடப்பட்டிருந்தது. இதனால் நிறைவேற்றப்படாத 18.59 கியுபிக் மீற்றருக்காக ரூபா 300,080 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்குரித்தாக பிரதேச சபையின் பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

மீளாய்வாண்டிற்காக சபையினால் போதியளவில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 05 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக பராமரிக்காமை |
| (ஆ) | மனித வள முகாமைத்துவம் | (i) | பதவியணியினரை அங்கீகரிப்பதற்கு தவறியமை |
| | | (ii) | உரிய பதவிக்குரித்தல்லாத கடமைகள் கையளிக்கப்படாமை |
| (இ) | செயற்திட்டங்கள் | | போதியளவு மேற்பார்வையொன்று காணப்படாமை. |
| (ஈ) | வருமான நிர்வாகம் | | ஆவணங்கள் நாளதுவரையாக பேணப்படாமை. |
| (உ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி புத்தகங்களில் உள்ளடக்கப்படாமை. |
| | | (ii) | சபைக்குச் சொந்தமான காணியை கையேற்க நடவடிக்கை எடுக்கப்படாமை. |